KFA-I-M

## மூன்றாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - ஆறு - __________

நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| --- | --- |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** $10 \times 1 = 10$

1. காந்தியடிகள் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்________________

   அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

2. 'தம் + உயிர்' - என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________

   அ) தம்முயிர் ஆ) தமுயிர் இ) தம்உயிர் ஈ) தமுஉயிர்

3. வாழ்வில் உயர கடினமாக ________________ வேண்டும்.

   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

4. 'நூலாடை' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆட

5. பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

   அ) மதுரை ஆ) கால் இ) சித்திரை ஈ) ஆல்

6. 'சோம்பல்' - என்னும் சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ________________

   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

7. பரிசு பெறும் போது உன் மனநிலை ________________ ஆக இருக்கும்.

   அ) கவலை ஆ) துன்பம் இ) மகிழ்ச்சி ஈ) சோர்வு

8. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறப்பிடும் நூல் ________________

   அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

9. 'தானென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   அ) தானெ + என்று ஆ) தான் + என்று இ) தா + னென்று ஈ) தான் + னென்று

10. கலைக்கூடமாகக் காட்சி தருவது ________________

    அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

**ஆ) பொருத்துக.** $4 \times 1 = 4$

11. இலக்கிய மாநாடு - பாரதியார்
12. தமிழ்நாட்டின் சொத்து - சென்னை
13. குற்றாலம் - ஜி.யு. போப்
14. தமிழ்க்கையேடு - அருவி

**இ) நிரப்புக.** 5 × 1 = 5

15. மிகவும் வேகமாக வளரக்கூடிய மரம் ________________
16. தமிழ்க்கவிஞர் பிறந்த ஊர் ________________.
17. மெய்க்கீர்த்தி என்பது ________________
18. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்ட இடம் ________________
19. இந்திய அரசியலமைப்பின் முகவுரையைத் தயாரித்தவர் ________________

II. **அ) கடிதம் வரைக.** 1 × 5 = 5

20. நூலகம் வேண்டி விண்ணப்பம் வரைக.

**ஆ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

21. சொற்களின் வகைகளைக் கூறுக.
22. உழைக்கும் போது என்னவாக ஆகிறோம்?
23. காந்தியடிகள் எவ்வாறு தமிழ் கற்றார்?
24. வேலுநாச்சியார் ஐதர் அலியின் உதவியை எவ்வாறு பெற்றார்?
25. இன்பநிலை எப்போது வந்து சேரும்?
26. தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**இ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

27. தாயுமானவர் வேண்டுவன யாவை?
28. தாராபாரதி பாடலின் கருத்தைச் சுருக்கி எழுதுக.
29. காந்தியடிகளுக்கும், தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.
30. கலீல் கிப்ரான் பற்றிக் குறிப்பு வரைக.

III. **அ) மனப்பாடப் பாடல்** 2 × 2 = 4

31. “தம் உயிர்போல்” எனத் தொடங்கும் “பராபரக்கண்ணி” பாடலை அடிபிறழாமல் எழுதுக.
32. “எல்லோரும்” எனத் தொடங்கும் “பராபரக்கண்ணி” பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**ஆ) சொற்றொடரில் அமைத்து எழுதுக.** 3 × 1 = 3

33. மாற்றம்
34. ஆலோசனை
35. ஆடம்பரம்